---

## 1 நிதிசார்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய வரையறுக்கப்பட்ட இலங்கை அசோசியெட்டற் நியூஸ் பேப்பர்ஸ் கம்பனியானது 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப்பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் எனது இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினால் நிதிசார் கூற்றுக்களில் எற்படக்கூடிய தாக்கங்களைத்தவிர இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய வரையறுக்கப்பட்ட இலங்கை அசோசியெட்டற் நியூஸ் பேப்பர்ஸ் கம்பனியின் 2010 திசெம்பா் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசாா் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 நிதிக் கூற்றுக்களின் சமர்ப்பிப்பு

கம்பனியின் நிதிக் கூற்றுக்களானது 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின்படி (அத்தியாயம் 6.5.1) நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களிற்குள் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களானது 2011 மார்ச் 28 இலேயே கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2001 ஆகஸ்ட் 01 ஆம் திகதிய வரைபுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகளிற்கான சீராக்கல்களைச் செய்தபின்னர் திருத்திய நிதிக் கூற்றுக்கள் 2011 ஆகஸ்ட் 26 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

#### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 226,909,844 தொகையான ஆதனங்கள், பொறித்தொகுதி மற்றும்

உபகரணங்களின் மாதிரிப் பரிசோதனையில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) கம்பனியானது ஆதனங்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் நாளதுவரையறுக்கப்பட்ட பதிவேடு ஒன்றைப் பேணப்பட்டிருக்காததுடன் சொத்துக்களின் மதிப்பீடும் செய்யப்பட்டிருக்கவில்லை. ஆகவே கணக்குகளில் ஆதனங்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களாக காட்டப்பட்ட தொகை மற்றும் அவற்றில் மீது செய்யப்பட்ட பெறுமானத் தேய்வு என்பன உண்மையாகவும் நியாயமாகவும் கணக்குகளில் தரப்பட்டிருந்தனவாவென கணக்காய்வில் திருப்திப்பட முடியாதிருந்தது.

(ii) ஒவ்வொரு ஆண்டிலும் நிலையான சொத்துக்களின் வருடாந்த பௌதீக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்ட பின்னர் மிகைகள் மற்றும் குறைவுகள் இனங்காணப்பட்ட போதிலும் கடந்த 10 ஆண்டுகளாக எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படட்டிருக்கவில்லை.

(iii) ரூபா 45,650 இற்காக 1940 செப்டெம்பர் 23 இல் கொள்வனவு செய்யப்பட்ட கம்பனிக்குச் சொந்தமான கொட்டாஞ்சேனையிலுள்ள 15.87 பேர்ச் காணி நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை.

(iv) 1925 மற்றும் 1988 ஆம் ஆண்டுகளின் போது 99 ஆண்டுகளிற்கான குத்தகை அடிப்படையின் கீழ் பெறப்பட்ட சொத்துக்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை.

உதாரணம்: லேக்கவுஸ் கட்டிட வளவு மற்றும் கதிர்காமம் சுற்றுலா விடுதி

(v) இயந்திரம் மற்றும் தளபாடங்கள் அலுவலக உபகரங்களின் கணக்குகளில் முறையே ரூபா 18,271 மற்றும் ரூபா 9,909 ஆன தொகைகள் குறைத்துக்காட்டப்பட்டிருந்தன.

(vi) ஏஎன்சீஎல் இன் தச்சுத்தொழில் பிரிவால் செய்யப்பட்ட தளபாடங்கள் பெறுமதியிடப்பட்டு கணக்குளிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மருத்துவ காப்புறுதிக் கோரிக்கைக் கணக்கு ஊழியர்களிற்கு செலுத்த வேண்டிய செலவு மீதிகளை ஈடுசெய்தமை காரணமாக ரூபா 3,556,825 ஆல் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது.

(இ) தற்போதுள்ள மருத்துவக் காப்புறுதிப் பத்திரத்தால் மேவப்பட்டிருக்காத மருத்துவ செலவினங்களை மீளளிக்கும் நோக்கில் மருத்துவ நிதியம் ரூபா 3,110,000 தொகையுடன் 2004 நவம்பர் 18 இல் தாபிக்கப்பட்டிருந்தது. 2010 ஆம் ஆண்டின் போது அது புறம்பான நிதியமாக கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் ஏஎன்சீஎல் இன் நிதிக் கூற்றுக்களில் அது வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் 2004 இலிருந்து 2010 திசெம்பர் 31 வரை எதுவித கொடுப்பனவு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், 2010 திசெம்பர் 31 இல் உள்வாறான மீதி ரூபா 5,335,942 ஆக இருந்தது.

### 1.2.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பேரேட்டுக் கணக்குகளின்படி மீதி ரூபா 658,386 தொகையான காசோட்டம் ஏனைய பெறுவனவுகள் கீழ் காட்டப்பட்டிருந்த அதேநேரம் பட்டோலையின்படி இது ரூபா 621,000 ஆக இருந்தது. எனவே ரூபா 37,386 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டன.

(ஆ) சமர்ப்பிக்கப்பட்ட காலப்பகுப்பாய்வின்படி, வியாபாரக் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 690,718,867 ஆக இருந்த அதேநேரம் நிதிக் கூற்றுக்களின்படி இது ரூபா 699,195,942 ஆக இருந்தது. எனவே ரூபா 8,477,075 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டன.

(இ) கணனி முறைமையின்படி (அட்பிரோ முறைமை) மீளாய்வாண்டின் இறுதி இரண்டு மாதங்களிற்கான விளம்பர வருமானங்கள் ரூபா 635,535,376 ஆக இருந்த அதேநேரம் காசாளரால் பேணப்பட்ட பதிவேட்டின்படி இது ரூபா 627,276,234 ஆக இருந்தது. ரூபா

8,259,142 வித்தியாசத்திற்கான காரணம் கணக்காய்விற்கு விளக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கணனி முறைமையின்படி, மீளாய்வாண்டின் இறுதி இரண்டு மாதங்களிற்கான நாளாந்த காசுச் சேகரிப்புகள் ரூபா 40,236,741 ஆக இருந்த அதேநேரம் காசாளரால் பேணப்பட்ட பதிவேட்டின்படி இது ரூபா 35,080,330 ஆக இருந்தது. எனவே ரூபா 5,156,411 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(உ) முகவர் வருமான ரேரேட்டு பட்டியலின்படி 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உறுதிப்படுத்தல்களிற்காக அனுப்பப்பட்ட கடன்பட்டோர் ரூபா 238,301,981 ஆக இருந்த அதேநேரம் நிதிக் கூற்றுக்களின்படி இது ரூபா 233,971,501 ஆக இருந்தது. எனவே ரூபா 4,330,480 ஈன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

### 1.2.4 இனங்காணப்படாத கணக்ககள்

2008 ஆம் ஆண்டு தொடர்பான ரூபா 982,363 தொகையான இனங்காணப்படாத வைப்புக்கள் சில்லறைக் கடன்கொடுத்தோர் மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இது கணக்குகளில் இனங்காணப்பட்டு சீராக்கப்படாமல் கடன்கொடுத்தோராக கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

### 1.2.5 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஒரு ஆணடடினைவிட பழமைவாந்த ரூபா 49,607,481 மற்றும் 5 ஆண்டினை விட பழமைவாய்ந்த ரூபா 19,888,610 பெறுமதியான வியாபாரக் கடன்பட்டோர் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதேநேரம் 5 ஆண்டினை விட பழமைவாய்ந்த வியாபாரக் கடன்பட்டோர் மீதிகள் ரூபா 36,578,515 தொகையாகும்.

(ஆ) சில்லறைப் பொருட்கள் மற்றும் சேவைகளின் கொள்வனவிற்காக 104 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 2,055,064 தொகையான முற்பண மீதிகள் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 2 ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக இருக்கின்றன.

(இ) கடன் அடிப்படையில் வழங்கப்பட்ட புதினப் பத்திரிகைகள் அச்சிடல் தொடர்பான அச்சக கம்பனியிடமிருந்து பெறவெண்டிய ரூபா 20,460,395 ஆன தொகை 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 8 மாதங்கனினைவிட அதிகமாக நிலுவையாக இருக்கின்றன.

(ஈ) லக்பிம கம்பனிக்கு 2010 சனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் பொருள் பரிமாற்ற அடிப்படையில் 199,798 கிலோகிராம் அச்சிடல் தாள்கள் வழங்கப்பட்டிருந்தது. இருந்தபோதிலும், 2010 திசெம்பர் 31 வரை 104,388 கிலோ கிராம்கள் மாத்திரமே திரும்பப் பெறப்பட்டிருந்தது. இதன்படி, ரூபா 6,821,487 பெறுமதியான 95,410 கிலோ கிராம் அச்சிடல் தாள்கள் பெறப்பட்டிருக்கவில்லை.

(உ) ரூபா 30,263,267 தொகையான 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலவு மீதியில் ரூபா 1,471,287 ஆன தொகை இரண்டு ஆண்டுகளிற்கு அதிகமாக நிலுவையாக இருக்கின்றன. இருந்தபோதிலும், அத்தகைய மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) கம்பனியால் அமைய அடிப்படையில் ஈடுபடுத்தப்பட்ட பிரச்சாரர்களிடமிருந்து 8 ஆண்டுகளிற்கு அதிகமாக நிலுவையாக இருக்கின்ற ரூபா 2,185,197 ஆன தொகை அறிவிடப்பட்டிருக்கவில்லை.

(எ) தேசிய சேமிப்பு வங்கியிலிருந்து பெறப்படவேண்டிய ரூபா 5,432,000 ஆன தொகை 2010 திசெம்பர் 31 வரை வங்கியிடமிருந்து பெறப்பட்டிருக்கவில்லை.

(ஏ) வரட்சி நிவாரண நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கலிற்காக 2004 இல் கம்பனியின் உத்தியோகத்தரொருவருக்கு முற்பணமாக ரூபா 250,000 ஆள தொகை வழங்கப்பட்டிருந்தது. மேற்குிப்பிட்ட உத்தியோகத்தர் கம்பனியில் வேலை தற்போதும் செய்கின்ற போதிலும் அவரால் 2010 திசெம்பர் 31 வரை அந்த முற்பணம் திர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

**1.2.6 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

-----------------------------------------------------

கணக்குகளிலுள்ள பின்வரும் விடயங்கள் அவை ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிபிடப்பட்ட சான்றுகள் இன்மையால் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

| விடயம் | பெறுமதி | கிடைக்கப் பெறாத சான்றுகள் |
| --- | --- | --- |
| | ரூபா. | |
| ஏழு வங்கி மீதிகள் | 2,503,771 | உறுதிப்படுத்தல்கள் |
| முகாமைத்துவ சம்பளங்களைத் தயாரிப்பதற்காக தனியார் நிறுவனத்திற்கு செய்யப்பட்ட கொடுப்பனவு | 169,831 | தொடர்புடைய கேள்விக் கோவை |
| சில்லறைக் கடன்பட்டோர் | 12,155,658 | விலைப்பட்டியல்கள் மற்றும் நாட்குறிப்பு உறுதிச் சீட்டுக்கள் |
| முதலீடுகள் | 103,000 | மூல பங்குச் சான்றிதழ்கள் |
| வியாபாரக் கடன்பட்டோர் | 380,705,161 | உறுதிப்படுத்தல்கள் |
| | 395,637,421 | |

### 1.2.7 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(1) ஆம் பிரிவின்படி, மீளாய்வாண்டிற்கான வருடாந்த வரைவு அறிக்கையின் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2 நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் மீளாய்வு

### 2.1.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின்படி, 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் செயற்பாடுகள் விளைவித்த ரூபா 359,781,998 ஆன வரிக்கு முந்திய தேறிய நட்டத்திற்கு எதிரதாக முன்னைய ஆண்டில் ரூபா 82,354,674 ஆன வரிக்கு முந்திய தேறிய இலாபத்தினை விளைவித்திருந்தது. ஆதலால், ரூபா 442,136,672 ஆல் நிதிசார் விளைவுகளில் வீழ்ச்சியை அது காட்டுகின்றது. ரூபா 291,990,035 ஆல் செலவினத்திலேற்பட்ட அதிகரிப்பு மற்றும் ரூபா 150,146,638 ஆல் வருமானத்தில் ஏற்பட்ட குறைவு என்பன மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் விழுச்சியை விளைந்திருந்தது. வீஆர்எஸ் செலவிற்காக

ஏற்பட்ட ரூபா 168,708,049 ஆன தொகை மொத்தச் செலவு அதிகரிப்பதற்கு பிரதான காரணமாக இருந்தது.

### 2.1.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

(அ) மீளாய்வாண்டிற்கான கம்பனியின் மொத்த இலாப எல்லை மற்றும் இலாப மீட்டல் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது முறையே 4.32 சதவீதம் மற்றும் 15.46 சதவீதத்தால் குறைவடைந்திருந்ததுடன் சுய ஓய்வுபெறல் திட்டத்தின் மீதான கிரயம் ரூபா 360 மில்லியனால் அதிகரித்திருந்தது. இதன் விளைவாக முன்னைய ஆண்டிற்கான வரிக்கு முந்திய தேறிய இலாபமாக மீளாய்வாண்டிற்கான ரூபா 360 மில்லியன் வரிக்கு முந்திய தேறிய இலாபமாக மாற்றப்பட்டிருந்தது. முன்யை ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு நிதிக் கூற்றுக்களின் பகுப்பாய்வு ரீதியான மீளாய்வில் வெளிப்பட்ட முக்கிய சில விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

| | | **2010** | **2009** |
|---|---|---|---|
| (i) | மொத்த இலாப எல்லை | 44.97 % | 49.29% |
| (ii) | இலாப மீட்டும் தன்மை (விற்பனைக் கிரயத்தின் மீதான மொத்த இலாபம்) | 81.74% | 97.2 % |
| (iii) | புரள்வின் மீதான நிர்வாகக் கிரயம் | 41.93% | 39.95% |
| (iv) | விற்பனை சுழற்சி மீதான விற்னை மற்றும் விநியோகக் கிரயம் | 10.16% | 10.96% |
| (v) | புரள்வின் சுழற்சி மீதான நிதிக் கிரயம் | 2.25% | 4.05% |
| (vi) | திரவ விகிதம் | 1.16:1.00 | 2.32:1.00 |

(ஆ) இலாபம் மற்றும் நட்டம்

முன்யை ஆண்டுகளுடன் ஒப்பிடப்பட்டு 2010 ஆம் ஆண்டிற்கான தேறிய நட்டம் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | வரிக்கு முந்திய தேறிய இலாபம்/ (நட்டம்) |
|---|---|
| | ரூபா |
| 2007 | 31,920,326 |
| 2008 | (385,505,785) |
| 2009 | 82,354,674 |
| 2010 | (359,781,998) |

## 2.2. செயற்பாட்டு மீளாய்வு

### 2.2.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்பகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பனியானது மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டைப்போல் 6 புதினப்பத்திரிகைகள், 7 பருவ வெளியீடுகள் மற்றும் 11 வருடாந்த வெளியீடுகள் என்பவற்றினை வெளியிட்டிருந்தது. புதினப் பத்திரிகைகள், பருவ வெளியீடுகள் மற்றும் வருடாந்த வெளியீடுகளின் தேறிய பங்களிப்பு மீளாய்வாண்டின் போது ரூபா 76,274,213 ஆல் குறைவடைந்திருந்தது.

(ஆ) கம்பனியால் வெளியிடப்பட்ட ஆறு புதினப்பத்திரிகைகள் கம்பனியின் நிதிசார் விளைவுகளிற்கு சாதகமான பங்களிப்பினைச் செய்திருந்தன. விபரங்கள் பின்வருமாறுள்ளன.

(i) கம்பனியின் புதினப்பத்திரிகைகளின் ஒட்டுமொத்த விளம்பர வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 89,518,560 அல்லது 4.7 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(ii) கம்பனியின் ஒட்டுமொத்த புதினப்பத்திரிகைகளின் விற்பனை வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 42,362,064 அல்லது 8.19 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

### 2.2.2 செயற்திட்ட அமுலாக்கலிலுள்ள தாமதம்

வரையறுக்கப்பட்ட லேக் கவுஸ் ஆதன அபிவிருத்தி கம்பனியில் 1985 இல் செய்யப்பட்ட ரூபா 7,500,000 ஆன முதலீடுகளிலிருந்து மீளாய்வாண்டு வரை எவ்வித நலன்களும் பெறப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 முகாமைத்துவ திறமையீனங்கள்**

கம்பனியின் மிகை ஆளணியை குறைப்பதற்காக 2008 முதல் 2010 வரையான ஆண்டுகளின் போது சுய ஓய்வுபெறல் திட்டம் (வீஆர்எஸ்) அமுலாக்கப்பட்டிருந்தது. 839 ஊழியர்கள் சுய ஓய்வுபெறல் திட்டத்தின் கீழ் ஓய்வு பெற்றிருந்த போதிலும் சுய ஓய்வுபெறல் திட்டம் அறிமுகப்படுத்திய பின்னர் 194 ஊழியர்கள் நியமனம் பெற்றிருந்தனர். விபரங்கள் பின்வருமாறு உள்ளன.

| ஆண்டு | ஓய்வுபெற்ற ஊழியர்களின் எண்ணிக்கை | வீஆர்எஸ் இற்காக செலுத்தப்பட்ட தொகை |
|---|---|---|
| | | ரூபா |
| 2008 | 635 | 518,330,473 |
| | - | 3,229,257 |
| 2010 | 204 | 172,007,306 |
| | 839 | 693,567,036 |

| | ஓய்வுபெற்ற ஊழியர்களின் எண்ணிக்கை |
|---|---|
| நிரந்தர பதவியணியினர் | 37 |
| ஒப்பந்த அடிப்படை | 75 |
| ஒப்பந்த அடிப்படையில் மீள் நியமனம் | 82 |
| | 194 |

**2.2.4 காசு முகாமைத்தும்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை வங்கியில் பேணப்பட்ட பிரதான வங்கிக் கணக்கில் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாற்றப்படாத காசுக் கட்டளைகள் ரூபா 481,355 ஆகும், இவற்றில் ஆறு மாதங்களிற்கு மேலாக ரூபா 228,041 ஆன தொகை நிலுவையாக இருந்தன.

(ஆ) ரூபா 2,026,467 கூட்டுமொத்தத் அதொகையான 71 மதிப்பிழந்த காசோலைகளிற்காக முறையான நடவடிக்கை

எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவற்றில் ரூபா 939,150 பெறுமதியான 26 காசோலைகள் ஒரு ஆண்டிற்கு மேலாக நிலுவையாக இருந்தன.

**2.2.5 ஏனையவர்களிற்கு கம்பனியின் வளங்கள் வழங்கப்பட்டமை**

கம்பனியின் மூன்று வாகனங்கள் மற்றும் வாடகையடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட இன்னொரு மூன்று வாகனங்கள் என்பன வேறு அரசாங்க நிறுவனங்களிற்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அந்த வாகனங்களிற்கான ரூபா 1,650,000 தொகையான வாடகைக் கட்டணச் செலவுகள் கம்பனியால் செலுத்தப்பட்டிருந்தன.

**2.2.6 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ரூபா 797,779 பெறுமதியான 66 நிழற்பட பிரதி இயந்திரங்கள் பயனற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்டதாக இனங்காணப்பட்டிருந்தன.

(ஆ) 2010 பெப்ரவரியில் இறக்குமதி செய்யப்பட்ட ரூபா 6,951,913 பெறுமதியான 238 அச்சிடல் தாள் சுருள்கள் இருப்பில் இருந்தபோதிலும், 2010 யூலை 14 இல் 574 அச்சிடல் தாள் சுருள்கள் ஒவ்வொன்றும் ஐ.அ.டொலர் 770 என்ற வீதத்தில் ரூபா 26,062,634 ஆன கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இறுதியாக கொள்வனவு செய்யப்பட்ட அச்சிடல் தாளின் இருப்புக்கள் பயன்படுத்தப்பட்டிருந்த அதேநேரம் முன்னைய இருப்புக்கள் இருந்தன. இதன் விளைவாக, 238 அச்சிடல் தாள் சுருள்கள் ஒரு ஆண்டிற்கு மேலாக பயன்பாடின்றி வைக்கப்பட்டிருந்தன.

**2.2.7 இனம் காணப்பட்ட நட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 1407 மெற்றிக் தொன் அச்சிடல் தாள்கள் (ஜீஎஸ்எம் 45) 2010 பெப்ரவரி 24 ஆந் திகதிய நாணயக் கடிதம் ஊடாக வெளிநாட்டுக் கம்பனியிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்த, அதேநேரம் அந்த அச்சிடல் தாள்கள் சமரப்பிக்கப்பட்ட மாதிரியுடன் உடன்பட்டிருக்கவில்லை. மேலும், கொள்வனவுக் குழு ஏற்பட்ட நட்டத்திற்காக மேற்குறித்த கம்பனியிடமிருந்து ரூபா 500,000 ஆன தண்டப்பணத்தினை அறவிடுவதற்கு தீர்மானித்திருந்தது. இருந்த

போதிலும் 2011 சனவரி 10 இல் அந்த கம்பனியால் ரூபா 300,000 மாத்திரமே செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 2,395,000 பெறுமதியாக மதிப்பிடப்பட்ட நான்கு லொறிகள் ரூபா 2,135,521 இற்கு விற்கப்பட்டிருந்தமையால் ரூபா 259,479 தொகையான நட்டமொன்று கம்பனிக்கு ஏற்பட்டிருந்தது.

(இ) அச்சிடல் தாள் பயன்பாட்டு பதிவேட்டின்படி, ரூபா 11,479,829 பெறுமதியான 139,526 கிலோ கிராம் அச்சிடல் தாள்கள் சேதமடைந்தமை காரணமாக 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுதப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பாடசாலைப் புத்தகங்கள் அச்சிடலிலுள்ள தாமதம் காரணமாக கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்கு தண்டப்பணமாக ரூபா 2,021,204 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**2.2.8 வாகனங்களின் பாவனை**

-----------------------------------

மீளாய்வாண்டின் போது கம்பனியின் வாகன அணி தொடர்பான முக்கிய சில தரவுகள் மற்றும் தொடர்புபட்ட செலவினங்கள் என்பன கீழே தரப்படுகின்றன.

| | |
|---|---|
| சொந்த வாகனங்களின் எண்ணிக்கை | 82 |
| வாடகைக்கமர்த்தப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை | 26 |
| எரிபொருள் மீது எற்பட்ட மொத்தச் செலவினம் | ரூபா 37,774,139 |
| திருத்தங்கள் மற்றும் பராமரிப்புகளில் ஏற்பட்ட டொத்தச் செலவினம் | ரூபா 17,566,615 |

**2.2.9 பாதீட்டுக் கட்டுப்பாடு**

---------------------------------

பாதீடப்பட்டவற்றிற்கும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினத்திற்கும் இடையில் குறிப்பிடத்தக்க அளவு வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டதால் பாதீடானது முகாமைத்துவ கட்டுப்பாட்டின் பயனுள்ள கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை என்பது காட்டப்பட்டது.

**3.** **முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

-----------------------------------------------------

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள் காலத்திற்குக்காலம் கம்பனியின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பெறவேண்டியவைகளின் அறவீடு

(ஆ) கொள்வனவுகள்

(இ) மோட்டார் வாகனங்களின் கைதவிர்ப்பு

(ஈ) பதவியணினர் கடன்களும் முற்பணங்களும்

(உ) புதினப் பத்திரிகை/முகவர்களின் வைப்புக்கள் மற்றும் அறவீடுகள்

(ஊ) இருப்புக்கள்

(எ) சொத்துக்கள்